O.S.198-2021

**முதன்மை மாவட்ட நீதிமன்றம், புதுக்கோட்டை**

அ.வ.எண்.198/2021

பிரதிவாதி தரப்பு 1வது சாட்சி **செல்வம்** என்பவரின் வாக்குமூலம் இந்திய சாட்சிய சட்டத்தின்படி திருமதி. ஜெயஸ்ரீ, நகல் பிரிவு கண்காணிப்பாளர்/கிரேடு-1 பெஞ்ச் க்ளார்க் (பொறுப்பு) என்பவரால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. செல்வம் | வயது | : | 54/23 |
| தகப்பனார் பெயர் | : | கருப்பையா | தாலுகா | : | காரைக்குடி |
| கிராமம் | : | காரைக்குடி | தொழில் | : | கம்ப்யூட்டர் சென்டர் |

நாள்-28.11.2023

பி.வா.சா.1

**முதல் விசாரணை தொடர்ச்சி**

1) **26**.08.2020 தேதியிட்ட வங்கி பாஸ் புத்தகம் பி.வா.சா.ஆ.1,

2) ரூ.51,900/- செலுத்தியதற்குரிய ரசீதுகள் மூன்று பி.வா.சா.ஆ.2,

3) நீதிமன்றத்தில் ரூ.1,00,000/- டொபசிட் செய்த மெமோ பி.வா.சா.ஆ.3,

4) காவல்துறை கண்காணிப்பாளருக்கு கொடுத்த புகார் மனுவின் நகல் மற்றும் அதன் ஏற்பு சான்றிதழ் பி.வா.சா.ஆ.4,

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) நான் இன்ஜினியரிங் படித்துள்ளேன்.

2) நான் புதுக்கோட்டையில் கம்ப்யூட்டர் சென்டர் வைத்து நடத்தி வருகிறேன்.

3) வாதியை 20 வருடங்களுக்கு மேலாக தெரியும்.

4) பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் சத்தியபிரியா என்று கையெழுத்திட்டிருப்பது வாதியின் மகளாவார்.

5) எனது மகள் அந்த கல்லூரியில் படிக்கவில்லை. எனது உறவினர்கள் யாரும் அங்கு படிக்கவில்லை.

6) பணம் டெபாசிட் செய்யும்போது, செலுத்துபவர் கையெழுத்து போடலாம் என்றால் சரிதான்.

7) பி.வா.சா.ஆ.2ல் நான் கையெழுத்து போடாததற்கு ஏதேனும் சிறப்பு காரணம் உண்டா என்றால் நான் பணத்தைஅந்த பெண்ணிடம் கொடுத்தேன். அவர் தான் அதை நிரப்பி செலுத்தினார்.

8) நான் சொல்வது போல் பி.வா.சா.ஆ.2ல் கண்ட தொகையை கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

9) நான் வாதியின் குடும்ப நண்பர் என்பதால், வாதியின் கைவசம் இருந்த பி.வா.சா.ஆ.2 ஆவணத்தை அவருக்கு தெரியாமல் எடுத்துக்கொண்டு வந்துவிட்டேன் என்றாலும், இந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்த பின்னர் தான் வாதிக்கு நான் எடுத்துச்சென்றுள்ள விபரம் தெரியவந்தது என்று சொன்னால் சரியல்ல.

10) பி.வா.சா.ஆ.4 ஐ 8.08.2022ல் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான்.

11) வாதி இந்த வழக்கை நீதிமன்றத்தில் 2021ல் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான்.

12) 16.11.2021ல் நான் நீதிமன்றத்தில் எனது வழக்கறிஞர் மூலம் ஆஜராகியுள்ளேன் என்றால் சரிதான்.

13) வழக்கில் கொண்ட தொகையை கொடுப்பதிலிருந்து தப்பிபப்தற்காக பின் யோசனை செய்து பி.வா.சா.ஆ.4 புகாரை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

14) பி.வா.சா.ஆ.4க்கு மேலாக எந்த நடவடிக்கையும் நான் எடுக்கவில்லை என்றால் சரிதான்.

15) நான் கைரேகை வைப்பதற்கு மறுக்கவில்லை.

16) வழக்கு புரோநோட்டை நீதிமன்றத்தில் பார்வையிடுவதற்கு எந்த முயற்சியும் எடுக்கவில்லை.

17) எதனடிப்படையில் புரோநோட்டை பார்க்காமல் அதில் உள்ள கையெழுத்து என்னுடையது அல்ல என்று எவ்வாறு சொல்கிறேன் என்றால் நான் கையெழுத்து போட்டு கொடுக்கவில்லை என்பதால் சொல்கிறேன்.

18) நான் உண்மையிலேயே கையெழுத்து போடவில்லை என்றால் நீதிமன்றத்தில் எனது வழக்கறிஞர் மூலமாக அனுமதி பெற்று புரோநோட்டை பார்வையிட்டிருப்பேன் என்றாலும், அவ்வாறு நான் கையெழுத்து செய்யவில்லை என்பதால் தான் அந்த முயற்சியை எடுக்கவில்லை என்றாலும் சரியல்ல.

19) புரோநோட்டு, செக் ஆகியவற்றில் பூர்த்தி செய்யாமல் வெறும் கையெழுத்து போட்டால் அதை எவ்வாறு பயன்படுத்தலாம் என்ற விபரம் எனக்கு தெரியும்.

20) நானும், வாதியும் குடும்ப நண்பர்களாக இருந்ததால், எனது மேல் உள்ள நம்பிக்கையின் 'பேரில் வாதியிடமிருந்து ரூ.10,00,000/- கடனாக பெற்று புரோநோட்டில் கைரேகை மற்றும் கையெழுத்து ஆகியவற்றை சாட்சிகள் முன்னிலையில் போட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

21) புரோநோட்டு எழுதி கொடுக்கும்போது, அந்த கடனுக்கு ஆதரவாக அசல் சொத்துபத்திரத்தையும் கொடுத்தேன் என்றால் சரியல்ல.

22) வழக்கு தொகையை நான் வாதிக்கு செலுத்த கடமைப்பட்டுள்ளேன் என்றாலும், அந்த தொகையை செலுத்துவதிலிருந்து தப்பிபப்பதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

23) வா.சா.ஆ.1 ஆவணத்தை நீதிமன்றத்தில் வாதி தெளிவாக நிரூபணம் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை - இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
புதுக்கோட்டை.